**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 128/2021**
**வழக்கு சாட்சி PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரிமுத்து | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சங்கரன் | தொழில் | : | வைத்தியர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 10th, 2025.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் வைத்தியராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்துக்கள் என்னுடையதல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 04.11.2016ம் தேதி, 16.00 மணிக்கு தென்காசி புதிய பஸ்நிலையம் அருகில் வைத்து எதிரி பாபுசுந்தர் என்பவரை என் முன்பும், முத்துக்குமார் முன்பும் கைது செய்து விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய செங்கல் ஒன்றை

எடுத்து ஆஜர் செய்வதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. பின்னர், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் 17.45 மணிக்கு தென்காசி வடக்கு ஒப்பனை விநாயகர் கோவில் தெருவின் கீழ்ப்பக்கம் இருக்கும் தாம்சன் தொடக்கப்பள்ளிக்கு வடபுறம் காம்பவுண்ட் சுவருக்கு அருகில் முழு செங்கல் ஒன்றை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், முத்துக்குமார் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.11 13:17:45 +0530